**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213868

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.01.2021

Accepted: 16.02.2021

Published: 01.04.2021

Citation:
Shobana, H., and M. Kumar. "Feminist Ideology in Lakshmi Novels." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 4, 2021, pp. 32–37.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3868

*Corresponding Author:
shobana.gac@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Feminist Ideology in Lakshmi Novels

**H. Shobana**
*Assistant Professor, Tamil Department*
*Government Arts College, Ooty, Tamil Nadu, Inida*
https://orcid.org/0000-0002-8985-1615

**M. Kumar**
*Research Scholar, Tamil Department*
*Government Arts College, Ooty, Tamil Nadu, India*

**Abstract -** Feminism is a political concept centered on the welfare of women. A political position demanding equality, liberation and justice for women. This political concept cannot be used as a theory for literary study unless it is transformed into a literary study approach. Feminist literary theory is art. In the literature the woman is portrayed as very vulnerable, consumerist, emaciated and exposed to them as opposed to being identified as a tool to fulfill her sexual needs. The aim of feminist literary theory can be to find in social literature the social factors that contribute to the status of today's woman of inequality and freedom.

**Key Words:** Feminism, Literary Theory, Consumerism, Social Factor, Political Concept, Feminism.

**References**

1. Laxmi. (2013). *Amma Unaku Enna Achu*, Mayilapur, Chithirai Kulam, Chennai, Poonkodi Pathipagam.
2. Laxmi, (2010). *Kanavan Amaivathellam*, Chennai, Valli Lesar Graphics.
3. Laxmi. (2009). *Peyar Sollamaten*, Chithirai Kulam, Mayilapur, Chennai, Poonkodi pathipagam.
4. Laxmi, (1980). *Manam oru Rangaratinam*, Venkadasami Street, Thiruvallikeni, Chennai, Vetri printers.
5. Laxmi, (2014). *Thunai Thedum Pothu*, Chennai, Amaravathi Publishing.

# லட்சுமி புதினங்களில் பெண்ணியக் கருத்தியல்

*முனைவர் எச்.ஷோபனா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம்

*ம. குமார்*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம்

**முன்னுரை**

*பெண்ணியம் என்பது பெண்களின் நலனை மையமிட்ட அரசியல் கருத்தாக்கம். பெண்களுக்கான சமத்துவம், விடுதலை, நீதி, என்பன கோரும் அரசியல் நிலைப்பாடு. இந்த அரசியல் கருத்தாக்கத்தை இலக்கிய ஆய்வு அணுகுமுறையாக மாற்றினால் ஒழிய இலக்கிய ஆய்வுக்குப் பயன்படும் கோட்பாடாகப் பயன்படுத்த இயலாது. பெண்ணிய இலக்கியக் கோட்பாடு என்பது கலை. இலக்கியங்களில் பெண்ணை மிகவும் பலவீனமானவளாக, நுகர்பொருளாக, ஏமாளியாக படைத்துக்காட்டி அவள் பாலியல் தேவைகளை நிறைவுசெய்யும் கருவி என்று அடையாளப்படுத்துவதை எதிர்த்து அவற்றை வெளிக்கொணர்வதேயாகும். சமத்துவமற்ற சுதந்திரமற்ற இன்றையப் பெண்ணின் நிலைக்குக் காரணமான சமூகக்காரணிகளைக் கலை இலக்கியங்களில் தேடிக் கண்டடைவதை, பெண்ணிய இலக்கியக் கோட்பாட்டின் நோக்கமாகக் கொள்ளலாம்.*

***முக்கியச் சொற்கள்:*** *பெண்ணியம், இலக்கியக் கோட்பாடு, நுகர்பொருள், சமூகக் காரணி, அரசியல் கருத்தாக்கம், பெண் சமத்துவம், தமிழ்நாவல் திறனாய்வு (லட்சுமி)*

## இன்று நடைபெறும் பெண்ணிய ஆய்வுகள்

பெண்ணிய இலக்கியக்கோட்பாட்டைப் மேலோட்டமாகப் புரிந்துகொண்டதின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. இலக்கியங்களில் வரும் பெண் புனைவுகளையும் அவற்றின் நிலைகளையும் சிக்கல்களையும் திரட்டுவதை இலக்காகக்கொண்டே பெரும்பாலான பெண்ணிய ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

பெண்ணிய ஆய்வுகள் வழி கிடைக்கும் ஆய்வு முடிவுகள் பெண்ணியத்தின் அடுத்தகட்ட நகர்விற்கான தரவுகளாகப் பயன்படும்படி அமைய வேண்டும். அதற்கு முறையான சில அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பெண்ணிய ஆய்வுகள் செய்வது அவசியம். அப்படிப்பட்ட சில அணுகுமுறைகளை லட்சுமியின் புதினங்களின் வழியாக இனங்காட்டுவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உடல் புனிதம்

உடல் புனிதம் என்பது இங்கு பெரும்பாலும் பெண்ணின் மீதே திணிக்கப்படுகிறது. ஓர் ஆண் எத்தனை பெண்களுடன் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம் அது அவனுக்குப் பெருமை. இதையே ஒரு பெண் செய்தால் அது அவளுக்கு மட்டுமல்ல அவளது குடும்பத்திற்கே இழுக்காகக் கருதப்படுகிறது. லட்சுமி எழுதிய கணவன் அமைவதெல்லாம்" என்ற புதினத்தில் வரும் சந்திரசேகரன் பிறன் மனை விரும்பும்

கோழை. அவன் செய்த தகாத காரியம் மாதவியின் கற்புக்கே களங்கம் தேடிக்கொடுத்தது; வாழ்வையே குலைத்தது; கைக்குழந்தையுடன் கணவனால் கைவிடப்பட்ட அபலையாக்கி அவளை நடுத்தெருவில் நிற்கச் செய்துவிட்டது. தவறு செய்தவன் சந்திரன். ஆனால் தண்டிக்கப்படுபவள் மாதவி", (கணவன் அமைவதெல்லாம்,. பக்கம்-162 ). பழி ஓரிடம் பாவம் ஓரிடம். ஆண் தவறு செய்தாலும் அது பெண்களையே உடல் புனிதம் என்ற பெயரில் குற்றவாளியாக்கிவிடுகிறது. பல பெண்களிடம் ஆசைவார்த்தை கூறி ஏமாற்றும் சந்திரசேகரன் பாட்டு வாத்தியாரின் மகள் கௌரியையும் ஏமாற்றி, திருமணம் செய்யாமல் கர்ப்பம் ஆக்கி விடுகிறான். சந்திரசேகரனால் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த கௌரி மனமுடைந்து போகிறாள். பின்பு மாதவியின் துணைகொண்டு, யாருக்கும் தெரியாமல் ரகசியமானமுறையில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டு இறந்து போகிறாள். இந்தச் செய்திகளின் மூலம் ஒரு ஆணின் உடலானது மர்மமற்றதாகவும் வெளிப்படையானதகவும் உள்ளது. மாறாகப் பெண்ணின் உடல் மர்மமானதாகவும் புனிதமானதாகவும் பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் உள்ளது. மேற்கூறப்பட்ட செய்திகளின் மூலம் ஆண் பெண் இருவரும் தவறு செய்த போதிலும் உடல் புனிதம் என்பது பெண்ணின் மீதே திணிக்கப்படுகிறது என்ற செய்தியையும் இக்கதை மூலம் உணரமுடிகிறது.

## இரண்டாம் நிலை செயல்பாடுகள்

ஆண் என்றால் சுயம் உடையவன் என்றும் பெண் என்றால் பிறர், மற்றை இரண்டாம் நிலை என்றும் பாகுபடுத்திப் பார்ப்பதாலேயே பெண்களின் செயல்பாடுகள் இரண்டாம் நிலைச் செயல்பாடுகளாக அமைவதைக் காணலாம்.

பொதுவாக ஆண் செய்யும் வேலைகளில் அவனுக்குச் சமூக மதிப்புக் கூடுகிறது. மாறாகப் பெண் செய்யும் வேலைகளுக்கு சமூகமதிப்புக் கூடுவதில்லை. இதன் காரணமாகவே பெண்களின் செயல்பாடுகள் இரண்டாம்நிலை செயல்பாடுகளாக அமைகின்றன.

புதின ஆசிரியர் லட்சுமியின் நாவலான வேலியோரத்தில் ஒருமலர்", துணைதேடும் போது"ஆகிய நாவல்களில் பெண்களின் செயல்பாடுகள் இரண்டாம் செயல்பாடுகளாக அமைவதைக் காணலாம்.

துணைதேடும்போது' என்னும் புதினத்தில் வரும் மஞ்சுளா என்ற பெண் தன்னுடைய புகுந்த வீட்டில் கணவனுக்கு பணிவிடை செய்தல், சமைத்தல், முதியவரான மாமனாருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல், தன் கணவரின் தங்கையை கவனித்துக் கொள்ளுதல் அவளுக்கும் தேவையான பணிவிடைகள் செய்தல் போன்ற வேலைகளைச் செய்து வந்தாள். வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்ணாகவும் எதிர்த்துப் பேசாத பெண்ணாகவுமே மஞ்சுளா இப்புதினத்தில் வருவதால் அவளுக்கான சமூகமதிப்பு அங்கே அவளுக்கு உயரவில்லை.

இதன் காரணமாகவே பெண்களின் செயல்பாடுகள் இரண்டாம்நிலைச் செயல்பாடுகளாக அமைகின்றன.

அதேபோல் வேலி ஓரத்தில் ஒரு மலர்" என்னும் புதினத்தில் வரும் தாரணி என்ற பெண்ணின் கணவர் சுகுமார் திருமணத்திற்கு முன்பே தன்னுடைய மனைவியின் வீட்டாரிடம் என் மனைவியை நான் வேலைக்கு அனுப்பமாட்டேன்; அதுதேவையில்லை; என் வருவாயிலேயே நாங்கள் சுகமாக வாழமுடியும் என்று கூறுகிறான். உங்கள் மனைவி என்ற தகுதி வந்ததும் அவளை வேலைக்குஅனுப்புவதோவீட்டில்வைத்துக் கொள்வதோ உங்கள் இஷ்டம் என்று தாரணியின் அப்பா சொல்லிவிட்டார். இந்நிலையில் தாரணி தான் முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்து அவர்கள்

முடிவுக்குக் கட்டுப்பட்டு தான் செய்து கொண்டிருந்த வேலையை ராஜினாமா செய்கிறார்.

இந்தச் செய்திகளின் மூலம் பெண் என்பவள் வீட்டு வேலைகளைச் செய்யவே அமர்த்தப்பட்டு இருப்பதும் தானே முடிவு எடுக்க முடியாத நிலையில் இருப்பதுமே அவளின் செயல்பாடுகள் இரண்டாம் நிலை செயல்பாடுகளாக உள்ளதற்குக் காரணமாக அமைகின்றன.

### பெண் பற்றிய படிமங்கள்

பெண் பற்றிய படிமங்கள் என்பது காலகாலமாய் பெண்கள் என்றால் அன்பாய் இருக்கணும், விட்டுக்கொடுக்கணும் போன்ற ஒரேவகை மாதிரியைக்கொண்டு இருப்பது. உதாரணமாகத் தாய் என்றால் தியாகம், பாசம், தன்னலமின்மை, மனைவி என்றால் பணிவு, அடக்கம், பாசம் போன்ற குணங்களைக் கொண்டிருப்பது. லட்சுமி புதினங்களில் வரும் பெண்பாத்திரங்களில் பெரும்பாலானோர் இத்தகைய குணங்களைக் கொண்டிருக்கின்றனர். கணவன் அமைவதெல்லாம்" நாவலில் வரும் மாதவி என்ற பெண் தன்னுடைய ஏழ்மை நிலை தன் மகன் மணிவண்ணனுக்கும் வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தந்தை காட்டாத பாசம், அவர் ஊட்டாத கல்வி, தாயின் பரிவு எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுத்து தன் மகனை வளர்த்தாள். உன் பொருட்டு நான் நெருப்புக்குள் இறங்க வேண்டுமானாலும் தயார் உன்னைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் எனக்கு எதுவும் இல்லை (கணவன் அமைவதெல்லம்., பக்கம். 207) என்று மாதவி கூறும் கூற்றிலிருந்து மகனுக்காக எதையும் தியாகம் செய்யும் பண்பு உடையவள் என்பது புலனாகிறது. மாதவி தன் கணவன் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றபோதும் எந்நாளும் தன் கணவனை நினைத்து வாழ்பவளாக உள்ளாள். மாதவி ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் தான் உள்ளம் துயர் அடையும் வேளையிலும் தன் கணவன் பூபதியின் புகைப்படம் முன்னால் வந்து நின்று, பரிமளா சொல்லட்டும், ஊரே சொல்லட்டும், உலகம் தூற்றட்டும் என்னுடைய களங்கமற்ற தன்மையை நிரூபிக்க நீங்கள் மறுத்தது யாயமா (கணவன் அமைவதெல்லாம்., ப. 163) என்று கூறும் மாதவியின் கூற்றிலிருந்து கணவன்மீது மிகுந்த அன்பு கொண்டவள் மாதவி என்பது புலனாகிறது. மனம் ஒரு ரங்கராட்டினம்" என்னும் புதினத்தில் வரும் சுகுணா என்ற பெண் தன் கணவன் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தாள். தன் கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்திருந்தும் கணவனை விட்டுப் பிரிந்து வாழமுடியாமல் என்றும் தன் கணவன் நினைவாகவே வாழ்ந்தாள். இரண்டு வருஷங்கள் இனிமையானது; ஒருவாழ்வைத் தந்தவரை வெறுக்கவா முடியும் (மனம் ஒரு ரங்கராட்டினம்., பக்கம். 57) என்று மாதவி கூறும் கூற்று பெண்கள் என்றால் அன்பாய் இருக்கணும், விட்டுக் கொடுக்கணும் போன்ற ஒரு வகைமாதிரியின் அடிப்படையில் படைக்கப்பட்டிருப்பதை உணர்த்துகிறது.

### அதிகார பராமரிப்பு

ஆளும் பால், ஆளப்படும் பால் மீது தனது அதிகாரத்தைப் பராமரிக்க முயல்கிறது என்னும் கேட்மில்லட்டின் பாலியல் அரசியல் கருத்தை அடிப்படையாகக்கொண்டு அதிகார பராமரிப்பை அடையாளம் காணலாம். இந்தஅதிகாரப்பராமரிப்புபலஅடுக்குகளில் அமைந்துள்ளது. தனிமனித நிலை, குடும்ப அமைப்பு, சமூகம், பொருளாதாரம், அரசியல், உடலியல், என்ற அடிப்படையில் அதிகாரப் பராமரிப்பு உள்ளது.

துணை தேடும் போது" என்னும் புதினத்தில் வரும் இந்த அதிகாரப் பராமரிப்பானது, பெரும்பாலும் குடும்ப அமைப்பிலேயே வருகிறது. இப்புதினத்தில் வரும் தியாகேசன், சோமு, நாகநாதன் ஆகியோரது கதாபாத்திரங்கள் தங்களது அதிகாரத்தை மஞ்சுளா என்ற பெண் மீதே காட்டுகின்றன."

மஞ்சுளா ! உனக்கு என்ன இந்த வீட்டில் அப்படி ஒரு அதிகாரம் என்மகள் விமலா அவள் இஷ்டப்படி அலங்காரம் செய்து கொள்ளட்டும் அவளை நீ ஏன் கண்டிக்கிறாய். (துணை தேடும் போது., ப. 76) என்று மாமனார் மருமகள் மஞ்சுளாவை அதிகாரம் செய்பவராகப் படைக்கப்பட்டுள்ளார்.

ஒரு முறை தியாகேசன் வீட்டில் நடந்த ஒரு பெரிய பிரச்சனைக்காக மஞ்சுளா வீட்டை விட்டு வெளியே அனுப்பப்படுகிறாள். அப்போது மஞ்சுளாவின் கணவன் சோமு நான் சொல்வதற்கு இனி ஒன்றுமில்லை; உன் பெட்டியிலே துணிகளை சீக்கிரம் எடுத்து வைத்துக்கொண்டு நீ உன் பிறந்த வீட்டுக்குப் போ என்று தன்மனைவி மஞ்சுளாவிடம் தனது அதிகாரத்தைக் காட்டி வீட்டைவிட்டு வெளியே அனுப்புகிறான் (துனை தேடும் போது. ப. 116).

புகுந்த வீட்டில் இருந்து விரட்டப்பட்ட மஞ்சுளா பிறந்த வீட்டிற்கு வருகிறாள் அப்போது மஞ்சுளாவின் தந்தை நாகநாதன் மஞ்சுளாவிடம் நீ இங்கே வந்து தங்குவது தனக்கு பிடிக்காது, கட்டிக்கொடுத்த பெண் மறுபடியும் பிறந்த வீட்டில் வந்து உட்கார்ந்தால் பலரும் பலவிதமாக பேசுவார்கள் நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ தெரியாது நீ உன்புக்ககம் போய் சேர்ந்து விடு" (துணை தேடும் போது.; ப. 121) என்று நாகநாதன் தன்னுடைய அதிகாரத்தைத் தன்மகள் மஞ்சுளாவிடம் காட்டுகின்றார். இதன் மூலம் ஆளும் பால் ஆண்களாகவும் ஆளப்படும் பால் பெண்ணாகவுமே காட்டப்பட்டிருக்கிறதை அறிய முடிகிறது. இந்தப் புதினத்தில் வரும் மஞ்சுளா என்ற பெண் ஆளும் பாலின் அதிகாரத்திற்கு உட்படுவதற்கான காரணமாக இருப்பது மஞ்சுளா காதல் திருமணம் செய்து கொண்டவள் என்பதே ஆகும். சோமுவும் மஞ்சுளாவும் இருவருமே இணைந்து காதலித்துத் திருமணம் செய்து கொண்டாலும், அதிகாரப் பராமரிப்பு என்பது பெரும்பாலும் பெண்ணின் மீதே திணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

### பெண்மைய விமர்சனம்

பெண்மைய விமர்சனம் என்பது பெண் படைப்பாளர்களின் படைப்புகளை எடுத்துக் கொண்டு அதில் வரும் பெண்களின் நிலை எப்படி இருக்கிறது என்று விமர்சிப்பதே பெண்மைய விமர்சனமாகும். பெண்மைய விமர்சனத்தில் பெண்கள் எப்படி இருக்கிறார்கள், பெண் புதின ஆசிரியர்கள் தங்கள் படைப்புகளில் பெண்களை எப்படிக் காட்டி இருக்கிறார்கள் என்று ஆராய்வதே பெண்மைய விமர்சனமாகும். புதின ஆசிரியர் லட்சுமியின் அம்மா உனக்கு என்ன ஆச்சு" என்னும் புதினத்தில் வரும் புவனா என்ற பெண் தன்னுடைய மகள் மஞ்சுளாவின் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனேயே மஞ்சுளாவை வெளியே வேலைக்கு அனுப்பாமல் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துகிறாள். புவனா மஞ்சுளாவிடம் இனிமேல் வீட்டில் சமையல் வேலை முதல் வீட்டை சுத்தம் செய்வது, காய்கறிகள் வாங்கி வருவது போன்ற அனைத்து வீட்டு வேலைகளையும் நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகிறாள். (அம்மா உணக்கு என்ன ஆச்சு., பக்கம் 39). பெயர் சொல்லமாட்டேன்" என்ற புதினத்தில் வரும் மனோகரி என்ற பெண் பெற்றோரை எதிர்த்து யோகநாதன் என்ற வாலிபரைத் திருமணம் செய்துகொள்கிறாள். திருமணத்திற்குப் பிறகு கணவனுக்கு ஏற்கனவே மனைவி பிள்ளைகள் இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைகிறாள். அதன்பிறகு யோகநாதனின் முதல் மனைவி மனோகரியை வீட்டு வேலைக் காரியாக ஆக்கிவிடுகிறாள். பல கொடுமைகளை அனுபவித்து வாழும் மனோகரிக்கு உதவ சமூக சேவகியான சாரதா முன் வருகிறார். அப்போது மனோகரி சாரதாவிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டு தன்னை ஏதாவது அனாதை ஆசிரமத்தில் விட்டுவிடும்படியும்

இல்லாவிட்டால் தங்களுக்குத் தெரிந்த வீட்டில் என்னை வேலைக்காரியாகச் சேர்த்து விடுங்கள்; நாணயமாய் நாய் போல் விசுவாசமாக இருப்பேன் என்றும் கூறுகிறாள். (பெயர் சொல்லமாட்டேன்., பக்கம் 41) இதேபோல் லட்சுமியின் மற்றொரு புதினமான மனம் ஒரு ரங்கராட்டினம்" புதினத்தில் வரும் சுகுணா என்ற பெண் கணவன் மீது பரிவும் பாசமும் கொண்டவள். குடும்பத்தில் எந்தவொரு செயல்பாடுகளிலும் ரோஷம், ஆத்திரம், ஆவேசம் போன்ற உணர்வுகள் இல்லாமல் இனிமையாக வாழ்ந்தாள் கணவனே கண்கண்ட தெய்வம்" (மனம் ஒரு ரங்கராட்டினம், ப. 41) என்ற கொள்கையில் ஊறிப் போனவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

புதின ஆசிரியர் லட்சுமி தன்னுடைய புதினத்தில் வரும் பெண்களைப் பெரும்பாலும் அமைதியான பெண்களாகவும், வீட்டு வேலை செய்யும் பெண்களாகவும், எதிர்த்து பேசாத பெண்களாகவும், கோபம் ஆத்திரம் போன்ற உணர்வுகள் இல்லாத மென்மையான, இனிமையான பெண்களாகவும் படைத்துக்காட்டி இருக்கிறார்.

**துணைநூற் பட்டியல்**

1. லட்சுமி. (2013). *அம்மா உனக்கு என்ன ஆச்சு.* சென்னை, பூங்கொடி பதிப்பகம்,
2. லட்சுமி. (2010). *கணவன் அமைவதெல்லாம்.* சென்னை, வள்ளி லேசர் கிராஃபிக்ஸ்
3. லட்சுமி. (2009). பெயர் சொல்லமாட்டேன். சென்னை, பூங்கொடிபதிப்பகம்.
4. லட்சுமி. (1980). *மனம் ஒரு ரங்கராட்டினம்.* சென்னை, வெற்றிஅச்சகம்.
5. லட்சுமி. (2014). துணைதேடும் போது. சென்னை, அமராவதி பதிப்பகம்.